# குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 27 - 1 - 59 செவ்வாய் | இசை: 34


# தமிழகம் வென்றாக வேண்டும்!

*ராகம்: திருரஞ்சனி* — *தாளம்: ஆதி.*

இன்றே செயத்தக்க தொன்றே
—தொண்டுசெய்
இன்பத் தமிழ்நாட்டுக் கென்றே

அன்பி னால் உள்ளம் நன்றாக வேண்டும்
அனைத்துத் தமிழரும் ஒன்றாக வேண்டும்
பொன்றும் வடக்கர்கள் சென்றாக வேண்டும்
பொன்னான தமிழகம் வென்றாக வேண்டும்
(இன்றே)

இழந்த புகழைநீ மீட்கத் தான்வேண்டும்
இரண்டில் ஒன்றைநீ பார்க்கத் தான்வேண்டும்
முழந்தாள் இடுவதோ பார்ப்பனன் ஆட்சிக்கு?
முத்தமிழின் ஆட்சியைச் சேர்க்கத் தான்வேண்டும்
(இன்றே)

சாதிக் கிறுக்குத்தான் தாழ்வைப் போக்குமோ
சமையக் கிறுக்குத்தான் வாழ்வை ஆக்குமோ
தீது வடக்குநோய் தமிழைக் காக்குமோ
செந்த மிழ்நாட்டின் அடிமை போக்குமா.
(இன்றே)

---

இசை அமைப்பு:

ஸ் நி ரி ஸ் நீ. த த. மா. த . .
இ ன் . . றே. செ ய த். த க் க.
ம த நீ. த. ம. கா ரி ஸ.
தொன். றே. தொண்டுசெய்
நி ஸ ரி க மா க மா . . க ம த நி ஸா
இன்பத்தமிழ் நாட்டுக் கெ ன் . . றே.
நி த ம. க ம த நி.

த ம. த. ஸா ஸ ஸ ஸ. ரீ. ரி. க் ரி க் ம் க் ஸ்
அன்பினால் உள்ளம். நன்றாகவேண்டும்
ஸ் ரி க் ம் ரி க் ஸ். ஸ் த ம. த த ஸ்
அனைத்துத் தமிழரும். ஒன்றாக. வேண்டும்
ஸ்ா நி த. ம த ஸ். ஸ். ரீ, ரி க். ரி க் ம் க் ஸ்ா
பொன்றும். வடக்கர்கள் சென்றாக. வேண்டும்
ஸ்ா ரி ஸ். நி த ம. த த ஸ் நி த மா ம. க ம
பொன்னான, தமிழகம் வென்றாக. வேண்டும்,

# எட்டி கரும்பாகாது

மீனாட்சி எனும்பெயரை மாற்றிக் கொண்டாள்
கயற்கண்ணி எனும் பெயரை மேவலானாள்
ஏன்என்றார் உறவினர்கள். தமிழாற் கொண்ட
என்விழியை என்அன்பர் இனிதாய் உண்பார்!
ஆனதினால் என்றுரைத்தாள்! தீர்த்தம் என்னும்
அதைவிட்டு நீர்என்றாய் ஏனோ என்றார்
தேனாகப் பருகுவர்என் இதழ்நீ ரைத்தான்.
தீர்த்தமெனில் அணுகாரே என்று சொன்னாள்.

கயற்கண்ணி தமிழ்மகளாய்க் காட்சி தந்தாள்.
கருப்பனுக்கு! விருப்பமெலாம் அவள்தான் என்றான்.
அயலெவரும் அறியாமே ஒருநாட் காலை
ஐந்துமணிப் புகைவண்டி ஏற லானார்
வெயிலப்பன் இதுகண்டான். "கருப்பா இஃது
மேன்மையோ எனக்கேட்டான். கருப்பன் சொல்வான்;
இயல்பாக நான்பெற்ற எதிர்கா லத்தின்
இன்பநாட் குறிப்பவளின் முகக்கண் ணாடி!

வண்டிபோய் அயல்நிலையம் நின்ற போது
மங்கையுடன் கருப்பன்தான் இருந்த பெட்டி
கண்டதிலே இருமாதர் ஏறி னார்கள்;
கைப்பிள்ளை புனற்செம்பு துணி முடிப்புக்
கொண்டொருத்தி குந்தஇடம் பார்த்து நின்றாள்
கொழுமொட்டைத் தலைஒருத்தி அவள்பின் நின்றாள்
திண்டாட்டம் நீக்குவாய் கயற்கண் ணாளே
சிறுகுழந்தை யொடுதாய் பார் என்றான் அன்பன்.

அன்னையையும் பிள்ளையையும் கைவி லக்கி
அடுத்துநின்ற மொட்டையினை இருங்கோ என்றே
தன்னிடத்திற் சரிபாதி ஒதுக்கித் தந்தாள்
தமிழினத்தின் மேல்வெறுப்பை ஒதுக்கா மங்கை!
இன்னலுற்றான் அன்னைக்கும் பிள்ளைக் குந்தன்
இருப்பிடத்தைத் தந்துதான் எழுந்து நின்றான் !
சென்னைபோய்ச் சேர்ந்ததுவாம் புகைச்சல் வண்டி.
சேரவில்லை அவ்விரண்டு கசப்புள் ளங்கள்

நல்லுணவு விடுதிஒன்றில் தங்கி னார்கள்.
நாள்போகும்; கிழமைபோம்; திங்கள் செல்லும்
அல்லல்மட்டும் அணுவளவும் நீங்க வில்லை
அவளுக்கும் அவனுக்கும்! ஒருநாள் அங்கே
நல்லதொரு வெயிலப்பன் வந்து சேர்ந்தான்;
"நலந்தானா?" எனக்கேட்டான். கருப்பன் சொன்னான்.
தொல்லையண்ணே! நான்பெற்ற எதிர்கா லத்தின்
துன்பநாட் குறிப்பவளின் முகக்கண் ணாடி!—

மெல்லிஅவள் படக்கூத்த னோடு தொலைந்தாள்
மீட்சிபெற்றேன் எனக்கருப்பன் வீடுசேர்ந்தான்.



புதுச்சேரி, தி. வ. ஆ. க௯௯௦ தை க௪

# களையெடுத்தல் பயிருக்கு நல்லது

24 — 1 — 59 சனியன்று வெளிவந்த விடுதலையில் பெரியாரின் அறிக்கை கண்டோம். அதில்,

“ கழகத்தின் இன்றைய நிலைமை நல்ல வளர்ச்சியும் தக்க மதிப்பும் பெருமக்கள் ஆதரவும், எதிர்பாராத பக்கமிருந்தெல்லாம் உதவியும் பெற்றிருப்பதாக நான் கருதி மகிழ்ச்சி அடைய வேண்டிய நிலையில் இருந்தாலும் நான் மேடையில் நின்று பேசும் நேரம் தவிர்த்து மற்றநேரமெல்லாம் துக்கமும், வேதனையும், கவலையும் எதிர்காலத்தின் கழகத்தைப்பற்றி, கழக வாழ்வை, நடத்தையைப்பற்றி நல்ல நம்பிக்கை கொள்வதற்கு இல்லாத அளவு மயக்கமும் அடைந்துகொண்டிருப்பவனாகவே இருக்கின்றேன்.”

என்று கூறியுள்ளார்கள்.

ஒரே கழகம் இந்நாட்டில். ஒரே ஆசிரியர் அந்தக் கழகத்திற்கு. சட்டாம்பிள்ளைகள் ஒரு சிலர். மாணவர்கள் கோடிக்கணக்கினர்.

ஆசிரியர் பாடஞ் சொல்லிக் கொண்டே செல்கின்றார். மாணவர் அறிவுபெற்றுப் பெருக்கம் அடைந்துகொண்டேயிருக்கின்றார்கள். இந்த நிலை தடைப்படுவதோ வளர்ச்சியடைவதோ சட்டாம்பிள்ளைகளைப் பொறுத்தவையல்ல. மதில் உறுப்பைத் தாங்கிக்கொண்டிருப்பதாகத் தோன்றும் ஓர்உருவமும் மதிலைச் செய்த கொத்தனாரின் வேலைப்பாட்டில்ஒன்றே!

இதுபற்றிப் பெரியார் வருந்தவேண்டாம்! மேலும் பெரியார்,

திராவிடர் கழகத்தில் பிளவுகளும் உட்பூசல்களும் மலிந்து கிடக்கின்றன. நல்லவர்கள் நாணயமானவர்கள் என்று என்னால் கருதப்பட்டவர்களிடமெல்லாம் எனக்கிருந்த உறுதி ஆட்டங் கொடுத்துவிட்டது. பொருளாதாரத் துறையில், கழகத்தில் உள்ளவர்களில் யார்தாம் பொறுப்போடு, கவலையோடு நடந்துகொள்ளுகிறார்கள் என என்னால் கண்டுபிடிப்பது கடினமான காரியமாகிவிட்டது. இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்குக் காரணம் கழக வளர்ச்சியும் இதனால் தோழர்கட்கு ஏற்பட்ட செல்வாக்கும் என்றுகூடச் சொல்லலாம். (அதுதான் உண்மை) ஆனாலும் அண்மையில் நாம் மாபெருங் கிளர்ச்சிப் போராட்டங்களில், இறங்கிப் பெருந் தியாகங்கள் செய்ய வேண்டியவர்களாக இருப்பதால் நம் ஒழுக்கத்தாலும், கட்டுப்பாட்டினாலும் சுயநல மின்மையாலும் நாணயத்தாலும் பொதுமக்களிடம் நாம் பெறவேண்டிய ஆதரவும் நல்லெண்ணமும் கொள்கையுணர்ச்சி பரவுதலையும், இழக்கவேண்டியதாகிவிடுமோ என்று பயப்படுகின்றேன்.

கோட்டி பிரிப்பதும் காட்டிக் கொடுப்பதுமான ஆசைநோய் வாய்ப்பட்ட சில சட்டாம் பிள்ளைகளால் பொதுநலங் கருதிய போருக்கு இடையூறு நேருமோ என ஐயப்படுகின்றார் பெரியார். அஃது அவர் அருள் உள்ளத்தின் இயல்பாகலாம் எனினும் அவ்வாறு அவர்களால்

**நன்றி!**

**“குயில்” பொங்கல் மலருக்குக் கவிதை, கட்டுரை அனுப்பியுதவிய பேராசிரியர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.**

**-அமைச்சர்.**

பொதுப்பணிக்கு இடையூறு நேராது என்றும் நேறும்படி செய்ய அவர்களால் இயலாது என்றும் நாம் கருதுகின்றோம்.

மேலும் பெரியார் இந்நிலையை மாற்றியமைக்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறுகின்றார்கள். பெரியார் இதை பன்னாளின் முன்னமே செய்திருக்கவேண்டும்.

இன்றாவது செய்ய முன்வந்தமை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

பெரியார் எடுக்கும் நடவடிக்கை பொது நலம் கருதியது. தனிநலம் கெடுகின்றதே என்று வருந்தும் சட்டாம்பிள்ளைகள் நம் இயக்கத்தில் இல்லை. இருந்தாலும் அவர்களால் பெரியாரின் பொதுப்பணிக்கு எத்தீமையும் நேர்ந்துவிடாது.

கழலை - கருவியிட்டு ஆற்றுவர்
புண்வைத்து மூடார் பொதிந்து.

◁□▷

## தமிழகப் புலவர் குழு
## திருச்சித் தமிழ்ச் சங்க
## வரவேற்பு.

அண்மையில் உருப்பெற்றது நாற்பத்தொன்பதின்மர் கொண்ட தமிழகப் புலவர்குழு.

௧௭ - ௧ - ௫௯ சனிக்கிழமையன்று திருச்சித் தமிழ்ச்சங்கத்தார் அப்புலவர் குழுவினுக்கு வரவேற்பு நல்கிப் பாராட்டினர் சிறப்பான முறையில்.

வருவார் எனத் திருச்சித் தமிழ்ச்சங்கத்தாரால் எதிர்பார்க்கப்பெற்ற ௪௯ புலவர்களில், வந்த புலவர்கள் முப்பத்துமூவரேயாவர். மற்றவர் வராமைக்கு வருந்தியும் வரவேற்பு விழா சிறப்புறுமாறு வாழ்த்தியும் திருமுகம் அனுப்பியிருந்தார்கள். அவர்கள் அனைவரும் பொங்கல் விழாவிற்குப் பற்பல ஊர்களுக்கும் அழைக்கப்பெற்றிருந்தவர்கள் அன்றோ.

வரவேற்புவிழா, காலை ௯ மணிக்குத் தொடங்கிற்று. விழாவிற்குப் புலவர் குழுவினரில் ஒருவரும், அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று ஓய்வு பெற்றவரும் முதுபெரும் புலவரும் ஆகிய திருவாளர் சதாசிவப் பண்டாரத்தார் தலைமை கொண்டருளினார்கள்.

திருச்சித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தமிழகப் புலவர் குழுவினர்க்கு வரவேற்பிதழ் படிக்கப் பெற்றது. பண்டாரத்தார்க்கு மலர் மாலை சூட்டிப் பெருமகிழ்ச்சி விளைத்தார்கள்.

பாராட்டுக்கு நன்றி கூறுமுகத்தால் தமிழகப் புலவர் குழுவின் சார்பில் பண்டாரத்தாரும் மற்றும் நால்வர் புலவரும் சொற்பெருக்காற்றி வந்திருந்த தமிழ்ப் பெருமக்களையெல்லாம் உணர்ச்சியில் ஆழ்த்தினமை குறிப்பிடத் தக்கதாம்.

திருச்சித் தேவர்மன்றத்து மேடை அன்று பெற்ற பெருமை என்றும் பெற்றதில்லை என்றனர் பலர்.

புலவருலகத்து முதுகெலும்புகளாகிய இம்முப்பத்து மூவரும் இனி நாம் செய்யவேண்டுவது உண்டு எனில் அது செந்தமிழ்த்தொண்டு எனும் ஒரே உள்ளத்தினராய்க் காட்சியளித்த புதுமையை இந்நாடு பன் நூற்றாண்டுகளாகக் கண்டதில்லை என்றனர் பற்பலர்.

இவ்வருஞ் செயல் செய்தார் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதனார். வாழ்க என வாழ்த்தினர் எல்லாரும்.

செந்தமிழ்க் கொல்லையை அழிக்கப் புகுந்த நரிக்கூட்டம் எந்தமிழ்ப் புலவர் கண்டு அஞ்சி நடுங்கிற்று என்று மகிழ்ந்தோம் நாம்.

வரவேற்புவிழா பன்னிரண்டு மணியளவில் முடிய அதன்மேல் புலவர் குழுவினர் தம்மிற் கூடி நல்லபல தீர்மானங்களைச் செய்து முடிக்கவும், பண்ணியங்களும் பல்கறிகளும் பரிமாறிய ஓவத்திலைகள் கூவியழைக்க வரிசையின் அமர்ந்து விருந்துண்டனர் புலவர் பெருமான்கள்.

தொழத்தகு புலவர் நிழற்படம் எடுக்கப் பெற்றனர் பின்னர்.

அதன்பின்னர் புலவர் வந்ததற்கும் போவதற்கும் ஆன புகைவண்டி இரண்டாம் வகுப்புக் கட்டணம் தரப்பெற்றுப் புகை வண்டி நிலையம் நோக்கினர். திரு. கி. ஆ. பெ. வி. இயங்கியானது புலவர்களை ஏற்றிக் கொண்டு பன்முறை பறந்தது வண்டிநிலையம் நோக்கி.

இக்குறிப்பில், அங்கு வந்திருந்த புலவர்களின் மகிழ்ச்சிக்குறிய பெயர்களைக் குறிக்கவில்லை, அடுத்த குயிலுக்கு ஆகட்டும்.

<★ ★>

# வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

## விருத்தம்

இதையும் வடமொழிஎன்றேபேசியும் எழுதியும் ஏமாற்றி வருகின்றார்கள் வடசொற்காரர்.

புதுமை என்ற பொருளுடைய விருந்து விருத்து என இடை ந், த் என வலிந்து அம் சாரியை பெற்று விருத்தம் ஆயிற்று.

சங்ககாலத்தில் விருத்தம் இருந்ததில்லை அதன்பின் புதிதாக வந்ததால் விருத்தம் எனப் பட்டது.

எனவே விருத்தம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்க.

## தூது

இதை வடசொல்லா என்று கேட்டு அஞ்சல் எழுதியுள்ளார் ஒரு தமிழத் தோழர்.

தூவல், தூதல், தூது இவையனைத்தும் தூ என்ற முதனிலையுடைய தொழிற் பெயர்களே. முறையே இவற்றில் உள்ள அல், தல், து ஆகியவை தொழிற் பெயர் இறுதிநிலைகளே.

தூது எனில் பொருள்? ஒருபாற் கருத்தை மற்றொருபால், சென்று தூவுவது என்பதே.

இது ஆண்பால் இறுதிநிலை பெற்றுத் தூதன் தூதுவன் எனவரும். அம்சாரியை பெற்றுத் தூதம் எனவும் வருவதுண்டு. தூதி பெண்பால்.

எனவே தூது தூய தமிழ்க் காரணப்பெயர்

## சுவர்க்கம்


இது துறக்கம் என்ற தூயதமிழ்க் காரணப் பெயர்ச்சொல்லின் சிதைவு. அவ்வாறு வடவர் சிதைத்து எடுத்தாண்டார்கள் நம் பழந்தமிழ் இலக்கியத்தினின்று.

துறக்கம் – விட்டநிலை. உள்ளத்தின் நிலை, ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம். பரனை நினைந்து இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு. என்ற நம் ஔவை மூதாட்டியார் அருளிய செய்யுட் பொருளை உற்றுக் காண்க. குடும்பத்தொல்லையைத் துறந்த உள்ளப்பாங்கே துறக்கம் என்றான் தமிழன். இந்திரன் முதலியவர்கட்குக் கள்ளையும் ஆட்டையும் மாட்டையும் கொடுத்துப் பெறுவதோர் மேலுலகம் என்றும் அதைச் செத்தபிறகே அடையமுடியும் என்றும் கூறும் ஆரியர் புரட்டை ஒத்துக் கொள்ளாதவன் தமிழன்.

இன்னும் அறியவேண்டுவது அதாவது நினைவில் வைக்கவேண்டியது தமிழன் இந் நாட்டில் என்றும் உள்ளவன், அவன் அன்றே நன்று வாழ்ந்தவன், ஆரியன் தமிழனிடத் தினின்றே பிச்சை எடுத்திருக்கவேண்டும்.

ஏன் இதை இவ்வளவாய் விரித்தோம் எனின், கம்பராமாயணத்திற்குப் பொருள் கூற வந்த ஒரு பார்ப்பனப் பேதை துறக்கம் சுவர்க்கம் என்ற வடசொல்லின் சிதைவு என்றான். பொந்து தேடி ஓடிவந்த ஆரியக் குரங்கு பொன்னுடை கட்டிவந்தது என்பதை நிகர்க்கும் இது.

<○>




தேவை

"குயில்" விற்பனையாளர் இல்லாத ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு;

அமைச்சர்
குயிலகம், புதுச்சேரி.

சிறுகதை

# நெருங்கிக்கொண்டிருக்கிறது!

தஞ்சை, தமிழ்த்துளி.

புகை வண்டியில் வந்து கொண்டிருந்தேன். என் எதிரில் இருந்த பார்ப்பனர் ஒருவர் தம்மருகிலிருந்த தமிழர் ஒருவருடன் உரையாடிக்கொண்டு வந்தார்.

"என்ன இருந்தாலும் பெரியார் கடவுள் இல்லேன்னு சொன்னாலுஞ் சொன்னார். இப்போ என்னடான்னா ஜாஸ்திபேர் கடவுளைத் திவ்யமாய்ப் பூஜிக்க ஆரம்பிச்சுட்டா. அவாளை இதற்காகப் பாராட்ட வேண்டுமோல்லியோ"? என்றார் பார்ப்பனர்.

[ இப்பொழுதெல்லாம் எல்லாப் பார்ப்பனர்களும் பெரியாரைப்பற்றிப் பேசாத நாளில்லை என்று சொல்லலாம். அப்படிப் பெரியார் அவர்கள் பார்ப்பனர்களின் அடிவயிற்றைக் கலக்கியிருப்பது பார்ப்பனர்களுக்குத்தானே தெரியும். ] பார்ப்பனர் சொன்னதற்குத் தமிழர் என்ன விடையளிப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் அமைதியாக இருப்பதைப்பார்த்து நானே பார்ப்பனருக்கு விடையளித்தேன்,

"வெடிச்சத்தம் கேட்ட குரங்கு பயத்தால் மரக்கிளையை உறுதியாகப் பிடித்துக்கொண்டது என்றால் குரங்கானது மரத்தின்மேலுள்ள அன்பினால் கிளையை இறுகப் பிடித்துக்கொண்டது என்று யாராவது சொல்வார்களா?"

"என்னப்பா சொல்றே அம்பி?

"அதிக மக்கள் இப்பொழுது கடவுளை வணங்குகிறார்கள் என்ற செயல் வெடிக்குப் பயந்த குரங்கு கிளையை இறுகப் பிடித்தது போன்றது. இறுகப் பிடித்த குரங்கு விரைவில் கிளையைவிட்டு விட்டு ஓடிவிடும்."

"என்னமோ அம்பி, ஆர்யாள்னா உயர்ந்தவாங்கிறதை இப்போ எங்கே மதிக்குறா"

"எங்கள் பழந்தமிழ்நிகண்டில் ஆரியர் என்றால் மிலேச்சர் என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது"

மிலேச்சர்ன்னு இருக்கச்சே அரசாளெல்லாம் ஆரியாள் வர்த்தைப்படி கேட்டு நடந்துப்பாளா?

தமிழ்நாட்டில் ஒருஆண்மகன் ஒருபெண்ணோடு மறைவான தொடர்பு கொண்டிருந்தால் அந்த ஆண்மகனின் நெருங்கிய நண்பன் அந்த ஆணுக்காகப் பெண்ணிடம் தூதாகச் செல்வான். ஆனால் எந்த நண்பனும் தன் நண்பனுக்கு உதவி செய்வானே அன்றிப் பிறருக்கு உதவிசெய்ய மாட்டான். ஆனால் பார்ப்பனர் மட்டும் எல்லா ஆண்களுக்காகவும் தூது சென்று அதாவது எல்லோருக்கும் மாமா வேலை பார்த்த செய்திகள் தமிழ்நூல்கள் அனைத்திலும் சந்திசிரிக்கின்றன. எளிய மக்களுக்கே இந்த இழிசெயலைச் செய்தவர்கள் அரசர்களுக்காக என்னென்ன இழிசெயல்கள் செய்தார்களோ? அரசர்கள் தங்களின் இழிசெயல்களுக்கு ஒத்துழைத்த பார்ப்பனரை எப்படிப் புறக்கணிக்க முடியும்? புறக்கணித்தால் மேலும் இழிசெயல்கள் எப்படி நடக்கும்.

உயர்ந்த வேதம் படித்த எங்களவா எல்லோரும் இப்படி ஒண்ணும் நடக்கமாட்டா. காவ்யமெல்லாங் கற்பனைங்கறதை மறந்துட்டுப் பேசறியேம்பீ.

ஆரியர்கள் பறைகொட்டிக் கொண்டு கயிற்றிலே ஏறி விளையாட்டுக்கள் காட்டிவரும் கம்பங்கூத்தாடிகளாய் ஊர்ஊராகச் சென்று பிச்சை எடுத்துப் பிழைத்தவர்கள் என்பதை எங்கள் தமிழ் நூல் குறுந்தொகை ஏழாம்பாட்டில் அறிந்து கொள்ளலாம்.

மனுஷாள் பூர்வோத்திரத்திலே குரங்குபோல ஜீவித்தான்னு "டார்வின்" சொல்லலியோ? அதுபோல ஆர்யாளும் கர்நாடகத்திலே ஏதோ தொழில் செய்து இருக்கலாமோல்லியோ?

ஆரியர்கள் கம்பங்கூத்தாடிகளாய் இருந்தார்கள் என்று நான் சொன்னதை மாற்றுவதற்காக "டார்வின்" சொன்ன கருத்தை எடுத்துக் காட்டினீர்களே. உங்களுக்கொல்லாம் இரட்டை நாக்குகள் என்று பெரியார் சொல்லிவருவது உண்மைதான். என்போன்ற தமிழ் படிக்கின்றவர்கள் ஆரியர்களின் இழிதொழில்களை எடுத்துக் காட்டினால் 'டார்வின்' கொள்கையை எடுத்துக் காட்டித் தப்பித்துக் கொள்வது. ஒன்றும் தெரியாத மக்களிடம் ஆரியர்கள் பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்கள் என்றுகூறி 'டார்வின்' கொள்கையை மறுத்துவிடுவது பாவம்! பிரம்மா ஆரியர்களைப் பெறுவதற்காகப் பெண்ணாக மாறிவிடுகிறார். அதிலும்

முகத்திலே குழந்தை பிறக்கும் உறுப்பையுடைய பெண்ணாகி விடுகிறார் (உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த அனைவரும் சிரித்தனர்)

காலம் கலிகாலமா யிருக்கச்சே நல்லவா பேச்சு எப்படி ஏறப்போறது?

அதைத்தானே நானும் கேட்கிறேன். காலம் கலிகாலமாய் இருக்கின்றபொழுது என் போன்ற நல்லவர்கள் பேச்சு உங்களுக்கு எப்படி ஏறும்.

பேச்சை நிறுத்திடுடா அம்பி! உன்னோடு பேசிண்டிருக்க நேக்குச் சரிப்படாது. ஐயரை யெல்லாம் யார் மதிக்கிறா?

உங்கள் பாரதியார்தானே சொன்னார் “பார்ப்பானை ஐயரென்ற காலமும்போச்சே” என்று மேலும், ஐயர் என்றால் என்ன பொருள் என்று உங்களுக்குத் தெரியுமா? தமிழில் ஐயம் என்ற சொல்லுக்குப் பிச்சைஎன்று பொருள். ஐயர்என்றால் பிச்சைக்காரர் அதாவது தமிழ்நாட்டில் பிச்சை எடுத்து வாழ்ந்துவந்தவர்கள். [ஒரே சிரிப்பு]

பேச்சை நிறுத்திக்கச் சொல்றச்சே பேசிண்டே யிருக்கியே. நாஸ்திகம் பேசறவாளைக் கண்டா நேக்குப் பிடிக்கவே பிடிக்காது.

உண்மையைப் பேசுபவர்கள்தாம் ஆத்திகர்கள் கடவுளின் பெயரால் மக்களிடம் கொள்ளையடித்து ஏமாற்றி உயர்ந்தவர்களாகக் கூறிக்கொண்டு வாழ்ந்துவந்த பார்ப்பனக் கூட்டத்தாரை, நேர்மை யற்றவர்கள் தமிழர்க்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒவ்வாதவர்கள் என்று, உண்மையைக் கூறி வருகின்ற ஒரு மனிதர் இந்த உலகில் பெரியார் ஒருவர் தான், ஆகையால் பெரியாரும் அவர் கொள்கை யைக் கடைப் பிடிப்போருந்தான் உண்மையான ஆத்திகர்கள்.

நீ அந்தக் கட்சியிலே சேர்ந்தாப்போல தெரியறது. நோக்கு ஒண்ணும் புரியாமே கொட்டம் அடிக்காதே.

உலகமேதை பெரியாருடைய உரைகளாலும் இந்த நூற்றாண்டின் தனிப்பெரும் கவிஞர் பாரதிதாசனாரின் கவிதைகளாலும் எழுப்பப்பட்ட தமிழர்கள் அனைவரும் ஆரிய வர்க்கத்தினரின் அநியாயங்களை ஒழித்துக்கட்டிவிட்டு மாபெருங் கொட்டமடித்துக் கூத்தாடப் போகும்நாள் வந்து கொண்டேயிருக்கின்றது, வந்துவிடும்!

# கணக்காய் வந்ததே கடன்காரப் பொங்கல்!

— நாவரசு —

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்
என்றே நிலவும் நன்னாள் எந்நாள்?
வாய்மையும், நேர்மையும் தாய்மையும், கூடிய
தூய்மையில் இன்பம் தோய்வதும் எந்நாள்?
அனைவரும் உடையவர்; ஆயினும், ஊழியர்;
அனைவரும் படித்தவர் ஆவதும் எந்நாள்?
வனிதையர், ஆடவர் யாவரும் நெறிதனில்
நனியுயர் பண்பினிற் கனிவதும் எந்நாள்?
புனிதத் தன்மையும், பொதுநலத் தொண்டும்,
மனிதத் தன்மையும் மிளிர்வதும் எந்நாள்?
ஊதியம் காணினும் ஓதுநற் கலைகள்
கோதிலா வளர்ச்சியிற் குவிவதும் எந்நாள்?
மறுமணம் தழைத்து மாசிலாக் கலப்புத்
திருமணம் பூத்துத் திகழ்வதும் எந்நாள்?
பன்மொழி கற்பினும், தாய்மொழிப் பற்றுடன்
தன்மொழி செழிக்கத் தோன்றலும் எந்நாள்?
அந்நாள் பொங்கற் புதுநாள் ஆகும்!
அந்நாள் மாந்தர் திருநாள் ஆகும்!
அந்நாள் மகிழ்ச்சிப் பெருநாள் ஆகும்!
இந்நாள் வந்த(து) எதுவெனில், ஏனெனில்—
கணக்காய் வந்ததே ‘கடன்காரப் பொங்கல்!’
மணக்கக் காணிலார் மனச்சான் றொப்புமோ?

உன்னோட யார் பேசிண்டிருப்பா, இந்த ரெயிலிலே நேக்கு வேறபெட்டி கிடைக்காதோ? என்று சொல்லிக்கொண்டே ஒருநிலையத்தில் அந்தப் பார்ப்பனர் இறங்கிக்கொண்டார். அவர் இறங்கும் பொழுது என்பெட்டியில் இருந்தவர்கள் அனைவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள், “பெட்டியை விட்டே விரட்டிவிட்டீர்களே” என்றார் ஒருவர்.

“பெட்டியைவிட்டு விரட்டியதுபோல் நாட்டை விட்டு விரட்டும்நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது” என்றேன் நான்!

# காந்தியுங் கழன்றார்!...

[வித்துவான், தா. குருசாமி]

உறக்கம் மிகுதியால் உறங்கும் போழ்தில்
இறக்கை பெற்றே வுலகிற் பறந்தே;
தலைவர் சிலரைப் பேட்டி கண்டேன்
முதலில்,
பனிசூழ் நாடு பணிந்தே போற்றும்
லெனினும் லிங்கனும் எதிரில் வந்தனர்
வணக்க மென்றேன்; 'வாழ்க' என்றனர்.
உங்களுக் கெங்கள் தமிழரைத் தெரியுமோ?
உவப்பா யெவரையும் விரைந்தே போற்றுவார்
என்றேன்; 'தெரியா' தென்றன ரிருவரும்!

பொதுமைக் கொள்கையைப் பரப்புந் தோழர்
கலைமகள் திருநாள் விடுமுறை தந்து
வம்பு விளக்குங் கம்பனைப் போற்றி
நாமம் போட்டே ஆழ்வா ரான
சீவ னற்ற 'ஜீவா' முதலியோர்
நுங்க ளடியில் தங்கிய தொண்டர்
எங்கள் தமிழர் சோற்றுத் தலைவர்
என்றேன்; விரைந்தே யெழுந்தார் லெனினே!

°மார்க்சு வழியோர் மதநெறி போற்றார்
பொதுமை நெறியைப் புகட்டுவோ ரவரல;
விழிப்பா யிருங்கள்! என்றே அகன்றார்.

இலிங்கன் இயம்பினார்; இனியநும் நாட்டில்
மனிதனை மனிதன் அடிமைப் படுத்திக்
குனியக் குனியக் கொட்டித் தாழ்த்துங்
கொடிய வழக்கம் உண்டோ? என்றார்.

கோத்தும் அடிமை நீக்கிய வித்தக!
தமிழக மொருநாள் இமயம் வரையில்
இமிழ்கட லுலகின் இதயம் ஈர்க்க
அறநெறி போற்றி அடிமை நீக்கி
எழுதரு ஞாயிறு யிலங்கி நின்றது!
அருளொடு கலவா அறிவைக் கொண்ட
ஆரியர் வரவால் முறிவது பட்டுப்
பிணங்கிப் பிரிந்து அடிமை யுற்றோம்!

அணங்கா யிளித்துத் தொட்டுக் தழுவி
அடிமைத் தளையில் மாட்டியே விட்டார்!
பன்னா ருண்டாய்ப் பண்பா டொழிய
மாட்டிய விலங்கின் அடிமைத் தளையை
உணராக் கயவரும் எம்மிடை உள்ளார்!
கயவ ரொழித்துத் தளையுந் தகர்க்க
முயலுவா ரொருவர் நும்மையு மொப்பார்!
தென்றமிழ்ப் பெரியார் தொண்டுக் கிழவர்
பெரியா ரென்போம்! அரியன செய்வார்!
அவர்வழி அடிமை நீங்கு மென்றேன்.
அடிமை ஒழிந்து வாழ்கநீ ரென்றே
இலிங்கன் இவ்வா றியம்பி அகலப்
பின்பு,
காந்தியார் வந்தார்; வணங்கி வணங்கி
விடுதலை விடுதலை என்றே முழங்கி
எங்கள் நாட்டை அடிமைப் படுத்தித்
தில்லியின் தலையில் மீண்டும் முடித்துச்
சென்றுவிட் டீரே! சொல்லொணாத் துன்பம்!
பந்தும் நேருங் கொட்டச் செய்வதும்
காசி விருந்து கடிதம் வரையில்
இந்தியிற் போட்டு இனியவெங் தலைவரைப்
புந்தி யற்றோ ரென்றே யிகழ்ந்தும்
அஞ்சற் றலைகளில் அருந்தமி ழிகழ்ந்து
வஞ்ச வடக்கர் தங்கவி பொறித்தே
எங்கவித் தலைவரைப் போட மறப்பதும்
கண்டிலீர் போலும்! வானொலி கூட
ஆகாச வாணியாம்; ஆகலின் தலைவ!
உன்பெயர் சொல்லி ஊராள் வோர்கள்
உலுத்தராய் விட்டார் விழித்தோ மின்று!
நின்பெயர் கேட்டே அடிமை யானோம்!
நின்னுருக் கண்டே உரிமையும் மறந்தோம்!
நின்பெய ரின்று நஞ்சாம்! அயினும்!
நின்பட மெரிக்கப் பெரியார் விழைந்ததும்
தெரியுமோ? என்றேன்; 'தெரியும்' என்றார்.
இவ்வா றெல்லாஞ் செய்வா ரென்றே
காங்கிர சன்று கலைக்கச் சொன்னேன்
விடுதலை என்ற பொருளை அறியா
வடக்க ருறவு வேண்டவே வேண்டாம்!
உறவு நீத்துப் பிரிந்தே வாழினும்
வடவ ரிடக்குச் செயவே நினைப்பவர்
அன்னார் செயலை அடக்கியே வாழ்க!
என்றார் காந்தி; எழுந்தேன் வியந்தே
காந்தி வந்தே கழறினும்
அந்தோ! விடுவரோ? வடக்க ரெம்மையே!

<★>

°மதுரைப் பொதுவுடைமைத் தோழர்கள் சித்திரைவிழாவில் உண்டியலெடுக்கும் பொழுது கட்சிக்கொடியோடு நாமமும் போட்டுக் காட்சியளிப்பார்கள்.

---

ஆத்தூர்தோழர், ஆ. சி. இசையழகன்
அவர்கள், தமிழர் திருநாள் நினைவாகவும்
குயில் வளர்ச்சிக்கெனவும் ரூபாய் இரண்டு
அனுப்பியுள்ளார் வரப்பெற்றோம்
நன்றி!

# பிசிராந்தையார்

## தொடர் நாடகம்

**இடம் :** *பிசிர் என்னும் ஊர்; ஓர் சோலை.*

**காலம் :** *மாலை.*

**உறுப்பினர் :** *பிசிராந்தையார், புலவர் பலர், பாண்டியன் படைத்தலைவர் புலவர் மேற்படியார், பாண்டிய நாட்டின் ஒற்றன்.*

**காட்சித்தலைப்பு :**

### ஆந்தையும், நாரையும்

**நிகழ்ச்சி :** *மாவின் அடியில் பிசிராந்தையார் வீற்றிருக்கின்றார். அவர்க்கு, எதிரில் ஒளிமங்கி வரும் பெரு வெளி காட்சியளிக்கின்றது. அப் பெருவெளியை வெள்ளை நாரைகள் ஊடுருவுகின்றன. அவ் வினிய காட்சி பிசிராந்தையார் மனத்தைத் தொடுகின்றது. அவர்பாடுகின்றார். பாட்டின் ஒவ்வொரு சொல்லையும் சுவைக் கின்றார்கள் உடனிருக்கும் புலவர்களும், அடுத்துச்சிறிது தொலைவில் பதுங்கியிருக்கும் பாண்டியனும் பிறரும்.*

பாட்டு.

அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை யளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையன் மாலையாம் கையறு பிணையக்
குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி
வ்டமலைப் பெயர்குவை யாயின் இடையது
சோழன் நன்னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்குஎம்
பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசிர்
ஆந்தை அடியுறை எனினே மாண்டநின்]
இன்புறு பேடை யணியத்தன்
நன்புறு நன்கலன் நல்குவன் நினக்கே.

*ஒருபுறம் பதிவிருந்து கேட்ட பாண்டியன் அறிவுடை நம்பி தன்னுடனிருந்த அமைச்சர் முதலாயினோரை நோக்கி வியப் வியப்புடன் கூறுகின்றான்.*

பாண்டியன்: அதோ சீறுகின்றது அந்தக் கோப்பெருஞ் சோழன் படை! அச்சீற்றப் படைக்கு உடையனான கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார்க்கு நெருப்பாவான் என்று எண்ணினேம் இல்லை. அவன் அவர்க்கு விருப்பானான். இஃது வியப்பே!

என் பகைவன். என்னையுடைய பிசிராந் தையார்க்கும் பகைவன் என்று எண்ணினேன் அவன்பால் தமக்குள்ள அன்பை நாலாவழியாக நவின்றருளினார்.

பாவேந்தர் உள்ளம் அவனைப் பகைஎன்று கொள்ளவில்லை. நண்பென்று நவிலுகின்றதே.

அமைச்சன்: இருக்கும் சூழ்நிலை கண்டு எதிர் காலத்தைக் கணக்கிடும் ஆற்றல் பாவேந்தர்க்கு உண்டு. நீங்கள் சோழனைப் பகைஎன்கின்றீர் கள். பாவேந்தர் நண்பர் என்கிறார் அந்தச் சோழனை.

எனக்கொன்று தோன்றுகின்றது வந்த செய்தியைப் பிசிராந்தையார்க்கும் நாம் சொல்ல வேண்டாம். திரும்பிப் போய்விடுவோம். விரைவில் தெரிந்துவிடும் சோழன் படை எடுப்பின் உண்மை!

படைத்தலைவன்: நேரே நானே சென்று. வந்த படை யாருடையது! என்பதை அறிந்து வந்துவிடுகின்றேன். திரும்புவோம். சோழன மேல் உயிர்வைத்துள்ளார் பாவேந்தர். அவரிடம் சென்று சோழன நம் பகைவன் என்று கூறிப் பாவேந்தர் உள்ளத்தைப் புண்படுத்துவது கொலைத் தொழிலுக்கு ஒப்பாகும்.

*( திரும்புகின்றார்கள். )*

---

எதிர்பாராதவிதமாக அச்சுப்பொறி பழுதாகி விட்டதால் இந்த இதழ் 12 பக்கங்களோடு வெளிவருகின்றது. அடுத்த இதழ் வழக்கம் போல் 16 பக்கங்களுடன் வரும்.

பொருத்தருள்க.

– அமைச்சர்.

---

# தமிழர் தலைவர்

தஞ்சை நெடுமாறன்


**தா**யகத்தை மீட்கும் விழுமிய பணியில் தமிழர் தலைவர் பெரியார் அவர்கள் முழுமூச்சாக இறங்கியிருக்கிறார்கள். வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாம் தமிழகத்தைப் பூணைக் குணை வடக்கர் தளையினின்றும் மீட்க அல்லும் பகலும் ஓடியாடிப் பறப்புதல் செய்து வருகிறார்கள். சாதியைப் பூண்டோடு ஒழிக்கவும, ஆண்டாண்டு தோறும் வடக்கர் சுளையாக விழுங்கும் 66 கோடி ரூபாயைத் தமிழகத்தின் நலனுக்கே பயன் படச் செய்யவும், பார்ப்பன ஆதிக்கத்தைப் புதைகுழிக் கனுப்பவும், தமிழ்-தமிழர் நலம் காக்கப் படவும் தலைவர் பெரியார் அவர்கள் பெரிதும் உழைக்கின்றார்கள்.

பழுத்த தொண்டு செய்யும் விழுமிய தலைவர் பெரியார். சீரிழந்த செந்தமிழ்நாட்டைச் சிறந்ததாய் ஆக்கமுயலும் ஒரே உண்மைத்தலைவர் பெரியார். செந்தமிழ் நாட்டினை வடவர் பிடியினின்றும் மீட்க ஈரோட்டுப்பாட்டையிலே வீறுநடை பயிலும் தன்மானத் தமிழர் பட்டாளம் பட்டாக்கத்தியேந்திக் களத்திலே நிற்கிறது.

நெஞ்சிலே உரமும், தோள்களிலே தினவும் கொண்டு வடவராதிக்கங்கண்டு அகந்தனில் அடக்கியும் அடங்காதெழுந்து புகைந்து உயிர்ப்பெறியப் பொறிகண் பொரிய நெடுந்திரள் புருவம் கொடுந்தொழில் குறிப்ப வளங்கெழு மீசையும் கிளர்ந்தெழுந்து ஆடக் களங்கமில் முகங்காட்டுஞ் சினத் தீயொடு போர்க்களத்திலே – தாயகத்தை மீட்கும் செருமுனையிலே பெரியார் படையினர் ஆயத்தமாக நிற்கின்ற வேளையில் அமையாப் பார்ப்படிமைகள் நொட்டைச் சொற்களை வீசுகின்றன. ஐயங்கொண்டார்போல் புரளி கிளப்புகின்றன, "போராட்டம் சரியன்று' என்று நொண்டிவாதம் பேசுகின்றன. "திராவிடநாட்டுச் செய்தி என்னாவது?" என்று அழிந்துவிட்ட கருவுக்கு ஆதரவாய்ப் பேசி ஏட்டிக்குப்போட்டியாக நடக்கின்றன. மாஸ்கோநோக்கிகள் முதல் ம. பொ. சி. கும்பல் ஈறாக அனைத்துக் கட்சிகளும் – வடவரும் பார்ப்பனரும் விட்டெறிகின்ற எலும்புத் துண்டுகளைப் பொறுக்கித் தின்று வாழும் சுயநலக் கும்பல்களும் தமிழ்நாட்டு விடுதலைக் கெதிராக முனைந்து நிற்கின்றன.

வரலாற்றுக் காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரை தமிழர்க் கென்று சிறந்த தொரு கலங்கரை விளக்கம் அமைந்தது கிடையாது. அவர்தமை வழிநடத்திச் செல்லும் திறமான தலைவர் கால வெள்ளத்தாலும் அழியாத பெருஞ்சீர் கொண்ட தலைவர் உண்டாகியது கிடையாது. சமுதாயத்தின் நோய் நொடி இதுவென அறிந்து சரியான மருந்து தரும் மருத்துவர் ஏற்பட்டது கிடையாது. தமிழர் நலத்திற் கென்றே தம் வாணாளைச் செலவிட்ட பெருந்தகை தோன்றியது கிடையாது – பெரியாரைத் தவிர. (அடுத்த இதழில் முடியும்)

வெண்பா வினாவிடைப் பகுதி இந்த இதழில் இடமின்மையால் அடுத்த இதழில் இடம்பெறும்.



அன்னபூரணாவின்

"மஞ்சள் மகிமை"யில்

நாகேஸ்வரராவ், சாவித்திரி.

## ஏன் சிரித்தாய்?

வித்துவான், தெ. ஜெயராமன் புதுவை.

இளங்கதிர் வந்து விட்டான்
என்பதால் சிரித்திட் டாயோ?
இளமாதர் முகங்கள் நாண
இளநகை பூத்திட் டாயோ?
களங்கமாம் மதி மறைந்த
களிப்பினால் உவந்திட் டாயோ?
நளினமே! உன்போக் கென்ன?
எதற்குநீ நகைத்து நின்றாய்?

வண்டுன்னைச் சுற்றிச் சுற்றி
வாயாரத் தொழுது பாடி
மண்டியிட் டுள்ள தென்ற
மகிழ்ச்சியோ? வைய மென்னும்
பெண்ணிருள் போர்வை நீக்கிப்
பிழம்பொளி யாடை கொள்ளக்
கண்டுதான் பூரித் தாயோ
கமலமே! ஏன்சி ரித்தாய்?

இரவெல்லாம் வையத் தாட்சி
இருளன்கை பட்ட தென்று
வருந்தியே உறங்கும் மாந்தர்
வாழ்வினை நிகர்த்தாய்; நீயே
பரிதியின் ருள வந்தான்
பறந்திட்டான் இருளன் என்று
சிரித்தெழும் மாந்தர் போலச்
சிரிக்கின்றாய் என்னே விந்தை!

உழுதுண்டு வாழ்வார் இன்றே
உவகையில் திளைக்கும் நன்னாள்
பழுதற்ற திருநாள் பொங்கல்
படைத்திடும் தமிழர் பொன்னாள்
எழுஞ்செழும் பரிதி வாழ்த்திப்
பொங்கலே பொங்கல் என்றே
எழுமொலி கேட்ப தற்கோ
மலரே! நீ ஏன்சி ரித்தாய்?

∞○○∞

## கார் வந்தது காதலர் வரவில்லை!

நள்ளி

**த**னிப்பேரறிஞன் வள்ளுவன் வகுத்த வழியில் வாழ வேண்டுமென்ற விரிந்த உள்ளங் கொண்ட தமிழ்ப் பழங்குடித் தோன்றலாம் இளைஞனொருவன் 'மனையுறை மகளிர்க்கு மணாளனே உயிர்' என்ற உயர் கருத்துக்கொண்ட உத்தமியுடன் கூடி அவள் கனியிதழ் சுவைத்துக் களிப்புற்றிருந்தான். அவளும் அவன்மார்பணைந்து இறுக்கிப் படுத்து ஒருடலாகி உயிர் வாழ்ந்தாள்.

பழந் தமிழர்க்கே யுரிய அறவழியில் பொருள் தேட அவன் நினைத்தான். காதலியிடம் கூறினான். உம் பிரிவை எவ்வாறு ஆற்றியிருப்பேன்? என்னைப் பிரிந்து போக வேண்டாம். நானே உமக்குப் பொருள். நீரே எனக்கு உயிர் எனக் கூறி மறுத்தாள் அவள். 'வினையே ஆடவர்க்கு உயிர்' ஆதலின், சென்று கார் காலத் தொடக்கத்தில் வந்து விடுகின்றேன் என ஆறுதல் கூறிச்சென்றான் அவன்.

நாட்கள் நகர்ந்தன. 'இன்று நாளை' என்று ஒவ்வொரு நாளையும் எண்ணிக் கொண்டிருந்தாள் அவள். கார் வந்தது. கண் கவர் காதலன் வந்திலன். என்னைக் கட்டியணைத்திட வந்திலரே வடிவழகர் என வருந்தினாள்; வாடினாள் வனிதை.

ஏனம்மா இவ்வாட்டம்? என்றாள் தோழி.

"வளந்தேடிச் சென்று அவர்க்கு இளமை வீணாவது தெரியவில்லை. எங்கே இருக்கிறாரோ? என்ன செய்கிறாரோ? என்னை நினைக்கிறாரோ? கார் வரும்போது காரிகையைத் தழுவி மகிழ வந்திடுவேன் எனக்கூறிச் சென்றார். கார் காலமும் வந்தது. என் அழகு குலைத்த அன்பரைக் காணேமடி தோழி. 'தமிழ் மகளிர்க்குரிய தனிப் பண்பையிழந்தனையே, இன்னும் உயிர் கொண்டு உலவுகின்றனையே' என்று இடித்துக் கூறிக் கேலிசெய்து நகைப்பது போல் முல்லை யரும்பி நிற்கின்றது" என்று சொல்லிக் கண்ணீர் வடிக்கின்றாள் தலைவி.

இதோ! நம் குறுந்தொகைச் சித்திரம்.

'இளமை பாரார் வளம் நசை இச்சென்றோர்
இவணும் வாரார்; எவணரோ?' என,
பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகு முகை இலங்கு எயிறு ஆக
நகுமே தோழி! நறுந்தண் காரே.

<★>

Regd. No. M. 7

# குயில்

## கன்னக்கோல்காரன்

ராகம்-புன்னாகவராளி. தாளம்-சாபு.

பார்ப்பான் இனப் பகைவன்என்றான் முன்னாளில் – அந்தப்
பார்ப்பான் காலைப் பணிந்துநின்றான் இந்நாளில்

(பார்)

ஊர்க் கோயிலின் உருவெறுத்தான் முன்னாளில் – அந்த
உரு வெல்லாம் கடவுளென்றான் இந்நாளில்

(பார்)

தீர்ப்பாய் ராமன் மனிதன்என்றான் முன்னாளில் – அந்தச்
சீராமன்தான் கடவுள் என்றான் இந்நாளில்

(பார்)

சேர்க்கவேண்டாம் பார்ப்பை என்றான் முன்னாளில் – மிகத்
தேவைஅவன் தலைமை என்றான் இந்நாளில்

(பார்)

பேரைச்சொல்லப் பார்ப்பான் என்றான் முன்னாளில்–அவனே
பிரா மணன் என்றுசொன்னான் இந்நாளில்

(பார்)

ஆரிய ரூர் சேரிஎன்றான் முன்னாளில் – அவனே
அக்ராகாரம் என்று சொன்னான் இந்நாளில்

(பார்)

ஓர் தமிழே வாழ்கஎன்றான் முன்னாளில் – அவனே
உயர் மொழிதான் இந்திஎன்றான் இந்நாளில்

(பார்)

பார் தமிழன் நான்என்றான் முன்னாளில் – அவனே
பார்ப்பான் மகன் நானேஎன்றான் இந்நாளில்

(பார்)

---

இசை அமைப்பு

*ஸா ரி க ரி ரி. ஸ ஸ . ரி ஸ நீ. ரி ஸ நி நி. ஸ ஸ*
*பா ர் ப் பா ன் இ ன ப் . ப கை வ ன் என்றான். முன்னாளில்–அந்த*
*ஸா ரி க. ரி ரி ஸ ஸ ரி ஸா ஸ. நீ, ஸ ரி ஸ.*
*பா ர் ப் பா ன் காலைப் . ப ணி ந் து நின்றான் . இ ந் நா ளி ல் .*

*இசை அமைப்பு,* T. N. S. மணி.

---

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.